REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 11உ புதன் (23—2—55) ★ ★ வெளியூர்: மாசி 12உ வியாழன் (24—2—55) [இதழ் 216

தோழர் மு: கருணுநிதி

சென்னை, பிப். 22—

இன்னும் இடது கண்ணில் ஊறும், வலியும் இருப்பது காரணமாக தோழர் கருணுநிதி மீண்டும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, ஐந்தாவது முறையாக ஆபரேஷன் செய்யப்பட்டிருக்கிறது. அவர்பூரண குணமடைய இன்னும் ஒரு ஆபரேஷன் தேவையென்றும், அது இந்த வியாழனன்று செய்யப்பட வேண்டுமென்றும் டாக்டர்கள் கூறியிருக்கிருர்கள். இரண்டு வாரகாலம் மருத்துவ மனையிலேயே மு. க. ஓய்வு பெறுவார். நண்பர்கள் யாரும் அதிகமாக அனுமதிக்கப்படுவதில்லை.

'திராவிட நாடு முடிவை நாம் கைவிடோம்'

'புலி வேட்டைக்குச் சென்றவன் குழலோசையால் மயங்கிவிடமாட்டான்'

'உண்மையான சமதர்மத்தை நிறைவேற்ற, காங்கிரஸ் மூலபலம் இடந்தராது'

மாதிரி சமதர்மம் பேச காங்கிரஸ் முனைந்துள்ளதற்கு அண்ணு விளக்கம்

"காங்கிரஸ் இன்று சமதர்மப் பாதையில் நடக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்த்தால், இன்று காங்கிரஸ் யாருக்காக இருக்கிறது என்ற உண்மை, சமதர்மத்தை காங்கிரசால் நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது என்பதைத்தான் சொல்கிறது."

'ஒரு உதாரணம் சொல்லுகிறேன்—இந்த மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குச் சொந்தமான பழைய கோட்டைப் பட்டக்காரர், காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்; காங்கிரஸ் பெயரால் இன்று, இந்த மாவட்ட ஆட்சி மன்றத் தலைவராயிருக்கிருர்; இவரும், இவரையொத்த இன்னும் எத்தனையோ பேரும் நிலப் பிரபுக்களும், ஆலை அரசர்களும் காங்கிரஸ் கட்சியில் இடம் பெற்றிருக்கிருர்கள்; இவர்கள் ஒரு பக்கமும், ஏழைகள் ஒரு பக்கமும் நின்றுகொண்டிருக்கிருர்கள்; இவர்களிலே யாருடைய நலனை காங்கிரஸ் கவனிக்கும் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லையே!"

"சோஷலிசம் மாதிரி என்று பேசுகிருர்களே, இங்கே—இந்த ஊரிலே உள்ள அத்தனை ஆலைகளையும், இந்த நாட்டில் உள்ள மற்ற ஆலைகளையும் சர்க்கார் உடைமையாக்குவார்களா? அவ்வாறு செய்யமாட்டார்கள்—'மாட்டோம்' என்று அவர்களே கூறுகிருர்கள்!"

"எனவேதான், தி. மு. கழகம், காங்கிரசின் 'சோஷலிச மாதிரி' என்பது, 'வெறும் புரட்டு' என்று கூறுகிறது; நாம், அந்தப் புரட்டினை அம்பலப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்."

"இனி, வருங்காலத்தில், காங்கிரஸ், இப்போதுள்ள 'சோஷலிசம் மாதிரி' என்பதை விடுத்து, உண்மையான சோஷலிசத்தை ஏற்றுக்கொண்டு செயல்பட்டாலுங்கூட, நாம், திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிடுவோமா என்ருல், நிச்சயம் விடமாட்டோம்."

"புலி வேட்டைக்குச் செல்கிற ஒருவன், இடையில், புல்லாங்குழல் ஒருவன் வாசித்துக்கொண்டிருந்தால், அந்தப் புல்லாங்குழல் ஓசை எத்தனையோ மதுரமானதாயிருந்தாலும், 'அதுவே போதும்,' என்றெண்ணி, விடு திரும்பமாட்டான்; அதைப் போலவே, 'திராவிடத் தனியரசு வேண்டும்,' என்ற இலட்சியத்தைக் கொண்ட நார், நாட்டிலே நிகழ்கிற சில அரசியல் நிகழ்ச்சிகளில் மனமயக்கம் கொண்டு, நமது இலட்சியத்தை மறந்து விடமாட்டோம்."

—என்று, கோவை, சிதம்பரம் பூங்காவில், 20—2—55 மாலை நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில், பொதுச் செயலாளர் அண்ணுதுரை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:—

"இன்று பேரூரில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவுகளை விளக்கி உங்களிடையே பல நண்பர்களும் எடுத்துக் கூறினுர்கள்.

"ஆவடியில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மாநாடு பற்றி உங்களிடையே அவர்கள் பலரும் பேசினுர்கள்.

"அங்கு 5 லட்சம் மக்கள் கூடியதையும், 35,000 கார்கள் சாரை சாரையாய் நின்றதையும், 'சோஷலிசம் போன்ற பொருளாதார அமைப்பு' பற்றி நிறைவேற்றியுள்ள தீர்மானம் குறித்தும் எடுத்துக்காட்டினுர்கள்.

"ஆவடியிலே கூடிய காங்கிரஸ் மாநாட்டில் 5 லட்சம் மக்கள் கலந்துகொண்டார்கள் என்பது ஆச்சரியத்திற்குரியதல்லவே!

"மாநாட்டிற்கு மூன்று மாதங்கட்கு முன்பாகவே மூன்று கலரில் விளம்பரம் செய்தார்கள்—'27 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் காங்கிரஸ் கூடுகிறது'—என்று!

"பார்க்கிற மக்கள் எண்ணமாட்டார்களா—'27 ஆண்டுகளுக்குப் பிறகு மாநாடாமே!'—என்று!

"காங்கிரஸ் தலைவர்களிலே பலர் எண்ணுகின்றனர்—'காங்கிரஸ், இன்னும் பத்து அல்லது 15 ஆண்டுகள் மட்டுமே உயிரோடு இருக்கும்,'—என்று!

"27 ஆண்டுகளுக்கு ஒருமுறை காங்கிரஸ் மாநாடு என்ருல், 'இப்போது தவறினுல், இனி எப்போது காங்கிரஸ் மாநாட்டைப்பார்க்கமுடியும்?' என்றுகூட உள்ளூர மக்கள் எண்ணி, லட்சக்கணக்கில் ஆவடியில் கூடியதில் என்ன ஆச்சரியமிருக்க முடியும்?

"அப்படிக்கூடிய அத்தனை மக்களும் காங்கிரஸ் மாநாட்டில் அரசியல் தெளிவுபெறக் கூடினுர்களா?

"காட்சிகளைப் பார்த்துத் தேர்ச்சி பெற்றவர்கள், வேடிக்கை பார்க்க வந்தவர்கள், 'என்னதான் பேசுகிருர்கள் கேட்டுவருவோமே,' என்று சென்றவர்கள்—எல்லோருமாகச் சேர்ந்து 5 லட்சம் பேர்கள் கூடினுர்கள்.

"ஆவடி மாநாட்டிற்காக அத்தனை லட்சம் ரூபாய் செலவழித்தது என்ருல், அதற்குக் காரணம், ஆட்சியிலமர்ந்திருக்கிறது காங்கிரஸ்!

"கோவையிலே மட்டும் உள்ள சீமான்கள் பல லட்சம் ரூபாய் நன்கொடை தந்திருக்கிருர்கள்.

"காமராசர் வெறும் காங்கிரஸ் தலைவராயிருந்த நேரத்தில், எத்தனையோ முறை இங்கு வந்திருக்கிருரே, அப்போதெல்லாம் அவருக்குத் தரப்படாத அமோக வரவேற்பு, அவர் முதன் மந்திரியான பிறகு தானே தரப்பட்டது?

"முதன் மந்திரியான காமராசரை வரவேற்று, 'எங்களையும் சற்று கவனியுங்கள்,' என்று கேட்டுக் கொள்வதற்காக, 'இதோ சில லட்சம் ரூபாய் — ஆவடி மாநாட்டிற்கு,' என்று, இந்த நகர முதலாளிகள் தந்திருக்கிருர்கள்.

"காமராசர் மட்டுமல்ல — நாளைக்கு வேறு யார் ஆட்சியிலமர்ந்தாலும், இந்த முதலாளிகள் அப்படித்தான் நடந்து கொள்வார்கள்.

"நாம் முதல் மாநில மாநாட்டினை நான்கு வருடங்களுக்கு முன், சென்னையில் நடத்தியபோது, அங்கு ஒரு லட்சம் மக்கள் கூடினுர்கள்; கூடினுர்கள் என்ருல், ஆவடியைப் போல ஒரு வேளை கூடிக் கலைந்து விடவில்லை; காலை 8 மணி முதல் இரவு 2-மணி வரையில் கூடியிருந்தார்கள்,—நான்கு நாட்களாக!

"நாம் நடத்திய மாநாடு—பஞ்சைகள், பராரிகள், பகல் பட்டினிகள், இராப் பட்டினிகள் நடத்திய மாநாடு;—அதில் ஒரு லட்சம் பேர் கூடினர்!

"ஆவடியில், பெரும் சீமான்கள், லட்சாதிபதிகள், ஆலை அரசர்கள் பணம் தந்து நடத்திய மாநாட்டில் ஐந்து லட்சம் பேர் கூடினுர்கள்!

"மேலும், அகில இந்தியாவெங்கணுமுள்ள காங்கிரஸ் கட்சியினர் ஆவடியில் மாநாடு நடத்தினுர்கள்; ஆனுல் நாம்—அகில இந்தியாவெங்கணுமல்ல — திராவிடத்தில் கூட முழுவதும் அல்ல—தமிழகத்தில் மட்டும் வளர்ந்துள்ள நாம், மாநாடு நடத்தினேம்; அதில் ஒரு லட்சம் பேர் கலந்து கொண்டார்களே!

(4-ம் பக்கம் பார்க்க)

அதிகாரமற்ற காங்கிரஸ் 'ஆத்மார்த்த அரசியல்'!

பஞ்சாப் காங்கிரஸ் தலைவர்களுக்குள் சச்சரவு!

அதிகார போராட்டமே மூலகாரணம்!

சந்திகார், பிப். 19—

பஞ்சாப் அரசாங்கக் கல்வி அமைச்சராக இருந்து வரும் ஜகத்நாராயணன், புதிதாக உருவாக்கப்பட்ட பிரதேச காங்கிரஸ் செயற் குழுவிலிருந்து விலகிவிட்டார். சில அடிப்படை விவகாரத்தில் தமக்கும், கூட்டுத் தோழர்களுக்குமிடையே ஏற்பட்ட வேற்றுமையின் காரணமாகவே அவர் விலக நேர்ந்ததாம்.

ஜகத்நாராயணன், பஞ்சாப் காங்கிரஸ் சூத்திரதாரிகளில் முக்கியமானவர் ஆவார். புதிய செயற் குழுவில் சேர்க்கப்படவேண்டுமென அவர் குறிப்பிட்ட பேர்களை எல்லாம், கூட்டுத் தோழர்கள் ஒதுக்கிவிட்டார்கள். இத்துறையில், அவரை நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக மற்ற காங்கிரஸ் தலைவர்கள் கொள்ளவில்லை.

ஜகத்நாராயணனின் ராஜினுமாவைப் பெற்றுக்கொண்ட பிரதேச காங்கிரஸ் தலைவர் ஞானி குருமுக் சிங் முசாபர், அவரைக் கலந்து பேச டெல்லிக்கு வருமாறு கோரியுள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகும், செயற்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டதற்குப் பின்னரும், காங்கிரஸ் தலைவர்களுக்குள் தோன்றியுள்ள 'உள்ளடி அதிகாரப் போராட்ட'த்தின் எதிரொலியே, ஜகத்நாராயணன் விலகல் என்று, விஷயமறிந்துள்ளோர் கூறுகின்றனர்.

★

ம. பா. சட்டசபை காங்கிரஸ் தலைவர் தேர்தலில் நெருக்கடி!

காங்கிரஸ் மேலிடத்தின் குறுக்கீடு

புதுடெல்லி, பிப். 21—

முன்னுள் மத்திய பாரத் அரசாங்க முதலமைச்சராக இருந்த காங்கிரஸ் தலைவரான தாகட்மால் ஜெயின், இரண்டு தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றுவிட்டு, மூன்ருவது துணைத் தேர்தல்களில் போட்டியிட்டு சட்ட சபை உறுப்பினராகி இருக்கிருர். அவரை மீண்டும் சட்ட சபை காங்கிரஸ் கட்சித் தலைவராக ஆக்கவேண்டுமென முயற்சிக்கப்படுகிறது. இதன் பலனுக இப்பொழுது சட்ட சபை காங்கிரஸ் கட்சித் தலைவராகவும், முதல் மந்திரியாகவும் இருந்துவரும் மிசிரிலாம் அங்குவாலை, அப்பதவிகளிலிருந்து விலக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

பிரதேச காங்கிரஸ் தலைவரான கன்னயாலால் காதிவாலா, காங்கிரஸ் மத்திய பார்லிமெண்ட் குழு உறுப்பினரான பண்டித பந்துவுடனும், செயலாளர் அகர்வாலுடனும் இம்மாற்றம் பற்றி கலந்தாலோசித்தார்.

புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதாக இருந்தால், காங்கிரஸ் கட்சியின் முழு ஒப்புதலுடனும், சட்ட சபை வரவு-செலவு திட்டக் கூட்டம் முடிவுபெற்ற பின்புமே, தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென, அவர்கள் கட்டளையிட்டுள்ளனர்.

★

பெப்சு காங்கிரசில் பதவிப் போட்டி

பிஷ் பானுக்கும் சர்தார் சிங்கிற்கும் 'கோஷ்டி சண்டை!'

'அவகாசம் தேவை' எனக் கூறி காங்கிரஸ் தூதுவர் திரும்பி விட்டார்!

பாடியாலா, பிப். 21—

பெப்சு சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களின் கருத்தறியாது பிஷ் பான் என்பவரை, காங்கிரஸ் மேலிடம், சட்டசபைக்

(4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 23—2—1955 புதன்

பொதுக் குழு முடிவுகள்

கோவைக்கருகில் இருக்கும் பேரூரில் கூடிய நமது பொதுக் குழு முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. தங்கள் நலன்களைப் பேணி வளர்த்து வரும் இயல்புடைய அத்தீர்மானங்களின் உட்பொருட்களை, திராவிடப் பெருங்குடி மக்கள் மனமுவந்து வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

சமதர்மம் போன்ற ஒரு ஏற்பாட்டை இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்படுத்துவதே தங்கள் இலட்சியமென ஆவடியில் கூடிய காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. எதிர்பார்ப்பதிலும் வேகமாக மாறிவரும் உலகச் சூழ்நிலையையும், உள்நாட்டில் கொந்தளித்தெழுந்து தீவிரமாகப் பரவி வரும் அரசியல் விழிப்புணர்வையும் அடிப்படையாகக் கொண்டு, ஆவடி காங்கிரஸ் தீர்மானத்தை ஆராய வேண்டும். அப்பொழுதுதான், தாம் காண விரும்பும் பொருளாதார ஏற்பாட்டுடன், துளியும் பொருந்த முடியாத 'சமதர்மம்' என்ற சொல்லை பிணைத்துப் போட வேண்டிய கட்டாயம் ஏன் காங்கிரசிற்கு ஏற்பட்டது என்பதை, ஒருவாறு பிறரால் புரிந்து கொள்வது இலகுவாகும்.

சமதர்மம் மாதிரியில் ஒரு ஏற்பாடு என்ற ஆவடி காங்கிரஸ் தீர்மானத்தின் சிருஷ்டி கர்த்தா அலகாபாத் பண்டிதரேயாவார். அந்த ஒரு தனி மனிதர் ஏவல் வழி இயங்கிக் கிடப்பதுதான் இந்தியப் பேரரசு என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். அப்பேரரசின் உள்நாட்டுக் கொள்கையும், வெளிநாட்டுக் கோட்பாடும் அதே பண்டிதர் உருவாக்கி வளர்த்து வருவதுதான் என்ற உண்மையையும் உலகு அறியும். நிற்க,

உலகம், வல்லரசுகளின் இரு முகாம்களாகப் பிரிந்து கிடக்கின்றது. அத்துடன் ஒன்றை ஒன்று விழுங்கி ஏப்பமிடுவதற்கான அரிய வாய்ப்பையும் எதிர் நோக்கிய வண்ணம் இருந்துவருகின்றது.

தொலைவில் உள்ள அமெரிக்காவுடன் நெருங்கிய நட்பும், இங்கிலாந்து உருவாக்கியுள்ள 'காமன்வெல்த்' கூட்டுறவும் கொண்டுள்ள அதே நேரத்தில், அண்டையிலுள்ள நவ சீனவுடனும், சோவியத் ரஷ்யாவுடனும் நட்புரிமை கொண்டாட வேண்டிய கட்டாயத்தில் இந்தியப் பேரரசு இருந்து வருகிறது. பொதுவுடைமை சீன நீங்கலாக ஆசியா கண்டத்தில் பெரிய நாடு எனக் கூறத் தகுந்த நிலைக்கு, நில நூலும் வரலாற்று நூலும் இந்தியத் துணைக் கண்டத்தைக் கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறது. தாம் எதிர்பாராதும், விரும்பாதும் தம்மீது திணிக்கப்பட்டுள்ள 'அவ்வந்தஸ்தை'க் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இந்தியப் பேரரசிற்கு ஏற்படுவது இயல்பேயாகும். இவ்வாசைதான், பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கையைப் பெரும்பாலும் உருவாக்கி ஊக்குவிக்கும் மூல சக்தியாக இருக்கிறது எனக் கொள்வது மிகையாகாது. அதற்கான மற்ற காரணங்களும் இருக்கக் கூடும். அவை அனைத்தும் அவ்வளவாகப் பொருட்படுத்தக்கூடாத துணைக் காரணங்களேயாகும்.

நவ சீனப் பிரதமர் இந்தியப் பேரரசின் விருந்தினராக வருவதும், இந்தியப் பிரதமர் சீன சென்று சீன அரசாங்கத்தின் பாராட்டுதலைப் பெறுவதும், இருவரும், ஒருவர் ஒருவர் மற்றொரு நாட்டின் தொழில் கொள்கையையும், அரசியல் கோட்பாடுகளையும் ஏற்றிப் போற்றுவதும் சர்வ சாதாரண அரசியல் சம்பவங்களாக உள்ளன. இத்தகு பாராட்டுதலின் விளைவு, பாராட்டுவதுடன் நின்றுவிடக் கூடியதல்ல.

அவ்விளைவு மேலும் தொடர்ந்து, பாராட்டுதலுக்குப் பாத்திரமாக இருந்த அரசாங்கத் தலைவர்கள் சேர்ந்துள்ள அரசியல் கட்சிகளுக்குப் புத்துயிர் ஊட்டுவதில் வந்து முடிவடைகிறது. எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமானால், இந்தியப் பேரரசிற்குக் கிடைத்த பொதுவுடைமை சீனவின் பாராட்டுதல், பண்டிதரின் காங்கிரஸ் கட்சிக்கு உள்நாட்டில் புதிய பலத்தை —அந்தஸ்தைக் கணிசமாகக் கொடுத்திருக்கிறது.

இவ்விளைவு, காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கைக் கூட்டுவதுடன் நின்றுவிடவுமில்லை. காங்கிரசின் பலத்தைப்பெருக்க உதவிய அதே காலத்தில், உள்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் வன்மையையும் — வளர்ச்சியையும் குன்றச் செய்திருக்கிறது என்பது மறந்துவிடக் கூடியதன்று. இவ்வுண்மையை மேலும் விளக்கமாகக் கூற வேண்டுமானால், இந்தியப் பேரரசிற்குக் கிடைத்த சீனவின் பாராட்டுதலினால், காங்கிரஸ் நடவடிக்கைகளைத் தாக்கிக் கூறும் நாவன்மையை உள்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி இழந்துவிட்டிருப்பதுடன், காங்கிரஸ் கோட்பாடுகளை மறுக்கும் அறவழித் துணிவையும் கம்யூனிஸ்ட் கட்சி இன்று இழந்துவிட்டிருக்கிறது எனக் கொள்வதே பொருத்த முடையதாகும்.

இவ்வீழ்ச்சியை மேலும் விரைவுபடுத்துவதுதான் ஆவடி காங்கிரஸ் போட்டுள்ள சமதர்ம மாதிரியில் ஒரு பொருளாதார ஏற்பாடு எனும் விசித்திரத் தீர்மானமாகும். எதை உள்நோக்கமாகக்கொண்டு பண்டிதர், ஆவடியில் அத்தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தாரோ, அவ்வுள் நோக்கம் எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்கும் குறைவான காலத்திலேயே, அவர் உள்ளெண்ணத்தை நூற்றுக்கு நூறு வெற்றிபெறச் செய்துவிட்டது. இந்தியப் பேரரசின் தொழில் திட்டங்களும், முன்னேற்றமும் சோவியத் சார்பில் பாராட்டப்படுகின்றன. இப்பொழுது இந்தியப் பேரரசு பின்பற்றிவரும் தொழில் முன்னேற்றத் திட்டந்தான், ஆவடி காங்கிரஸ் தீர்மானத்தைப் பிரதிபலிக்கின்ற, சமதர்ம மாதிரி பொருளாதார ஏற்பாடோ என்னவோ யார் கண்டார்கள்?

'சமதர்மம்' என்ற சொல்லைக் காட்டி பொதுவுடைமை நாடுகளின் பாராட்டுதலையும், 'சமதர்மம் மாதிரியில் ஒரு ஏற்பாடு' என்ற வாக்கியத்தில் உள்ள 'மாதிரி'யை கொஞ்சம் அழுத்தி உச்சரிப்பதின் மூலம் அமெரிக்க, இங்கிலாந்து அரசுகளின் பாராட்டுகளையும் ஒரே காலத்தில் பெறவேண்டும் என்பதே பண்டிதரின் விருப்பமாகும். அதைப் பெற்றுத் தரும் அரிய சாதனம்தான் ஆவடி காங்கிரஸ் தீர்மானம்.

பண்டிதரின் தொழில்கொள்கைக்கு சோவியத் ரஷ்யா சார்பில் கிடைக்கும் பாராட்டுக்கு முன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கண்டனம் எம்மாத்திரம்?

ஆவடி காங்கிரஸ் தீர்மானம் நாம எதிர்பார்த்தபடியே, கம்யூனிஸ்ட் கட்சியைத்திணறடித்து இருப்பது போன்றே, ம. சோ. கட்சியிலும் குழப்பத்தைத் தோற்றுவித்திருக்கிறது. அக்கட்சித் தலைவர்களிடம், இக்குழப்பம், வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பியும் விட்டிருக்கிறது.

இன்னும் இரண்டே ஆண்டுகள் உள்ளன பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு. அதில் மீண்டும் பெரும்பான்மையினரான மக்களின் ஆதரவைப் பெற வேண்டுமானால், ஏதாவது ஒரு புதிய கோட்பாட்டை கூறியாக வேண்டிய கட்டாயம் காங்கிரசிற்கு இருக்கிறது. அக்கட்டாயத்தின் எதிரொலிதான் ஆவடி காங்கிரஸ் தீர்மானம்!

'சமதர்மம்'தான் தங்கள் கொள்கை எனத் தீர்மானித்திருந்தாலாவது, இதுவரை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சமதர்ம தத்துவத்தைக் கொண்டு காங்கிரஸ் சமதர்மத்தை மதிப்பிட்டு முடிவு கட்டுவது ஒவ்வொருவராலும் இயலக்கூடும். அப்படி மதிப்பிட்டு முடிவு கட்டக்கூடாது என்பதுதான் காங்கிரசின் உள்ளக்கிடக்கை. எனவேதான், எத்தகைய முரண்படும் தத்துவங்கொண்ட ஏற்பாட்டையும் இதுதான் 'சமதர்மம் மாதிரியில் உள்ள ஏற்பாடு' எனக் கூறித் தப்பித்துக்கொள்ளும் கெடுமதியுடன், ஆவடி காங்கிரஸ் முன்னெச்சரிக்கையாகத் தீர்மானித்திருக்கிறது.

இந்த உண்மையை அம்பலப்படுத்த கழகத் தோழர்களுக்கு, நமது பொதுக் குழு கட்டளை இட்டிருக்கிறது. கட்டுப்பாடாக, விடா முயற்சியுடன், ஆவடி காங்கிரஸ் தீர்மானத்தில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள மனமருட்சியைப் போக்குவதில் நாம் வெற்றி பெற்றாக வேண்டும்.

வலை வீச்சல்லவே!

ஆசியாவிற்கு நீண்டகால பொருளாதார உதவி அளிப்பதற்கென ஒரு புதிய திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர் அங்கீகரித்துள்ளதாகவும், இதன்படி சுமார் நூறு கோடி டாலர் பெறுமான பண்டங்கள், இயந்திரங்கள் முதலியவை ஆசிய நாடுகளுக்குக் கொடுக்கப்படுமெனவும் கூறப்படுகிறது. இவற்றுள் பெரும் பகுதியும் நீண்டகாலக் கடனாகக் கொடுக்கப்படுமாம்.

'கணவர்' இறக்குமதியைத் தடுக்க புதிய சட்டம்!

சமூக-மதக் கருத்துக்களுக்கு எதிரானது என இந்தியர் எதிர்ப்பு!

கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு வெளியிலிருந்து 'கணவர்'களை இறக்குமதி செய்யும் குடியேற்ற ஏற்பாட்டிற்குத் தடை ஏற்படுத்தும் குடியேற்றக் கட்டுப்பாடு சட்டம் ஒன்றை, உகாந்தா சட்டசபை நிறைவேற்றி இருக்கிறது. இந்திய சட்டசபை உறுப்பினர்கள், இச்சட்டத்தை பலமாக எதிர்த்தனர்.

இப்புதிய கட்டுப்பாடு, தங்களுடைய சமூக-மதக் கோட்பாடுகளுக்கு கேடு விளைவிப்பதாக உள்ளது என இந்திய உறுப்பினர்கள் வாதிட்டனர்.

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கன்னிப் பெண்களுக்கு மணம் முடிக்க வேண்டுமானால், ஒரு மணப்பெண்ணின் வயது 18 அல்லது அதற்குக் கூடுதலாக இருக்க வேண்டும் எனப் புதிய சட்டம் கூறுகிறது.

மணப் பெண்ணின் வயதை மெய்ப்பித்து, உகாந்தா குடியேற்றக் குழுவிடமிருந்து அத்தாட்சி பெற வேண்டுமென சட்டம் நிபந்தனை விதிக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அங்கு நடைபெற்றக் கல்யாணங்களில் ஒரு மணப்பெண்ணின் வயது 11-ஆகவும், மற்றக் கல்யாணம் செய்துகொண்ட பெண்களின் வயது 12-லிருந்து, 14-க்கு மேல் இல்லாமலும் இருந்திருக்கின்றன என்று அட்டர்னி ஜெனரல் குறிப்பிட்டார். இவர்களுடைய கணவர்கள் அனைவரும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்களாவர் எனவும் அவர் கூறினார்.

குறிப்பு:—கடந்த ஐந்து மாதங்களில் ஆயிரக்கணக்கில் குஜராத்திலிருந்து வாலிபர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், அதன் விளைவாக வட குஜராத்தில் வயது வந்தப் பெண்களுக்குத் தகுந்த வாலிபக் கணவர்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது என்றும் முன்னர் கிடைத்த செய்தி கருதத்தக்கது.

விவசாயிகளுக்கு உதவத் திட்டம்

600 'வடிமுனைக் கிணறு'கள் நிறுவப்படும்

உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின்கீழ், சென்னை மாநிலத்தில் இந்த நடைமுறை ஆண்டிற்குள் ரூ 20 லட்சம் செலவில் 600 வடிமுனைக் கிணறுகள் அமைக்கப்படுமென்று மாநில விவசாய இலாகா டைரக்டர் தெரிவித்துள்ளார்.

இன்னும் சில திங்களுக்குள் வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, மலபார், தென் கன்னடம் ஆகிய மாவட்டங்களில் அவை அமைக்கப்பட்டுவிடுமாம்.

வடி கட்டும் சாதனங்கள், குழாய்கள், எஞ்சின்கள் ஆகியவைகளுக்காகும் தொகை, விவசாயிகளுக்கு முன்னதாகவே கடனாக அளிக்கப்படுமென்றும், இத்தொகை 5 தவணைகளில் திருப்பிப் பெற்றுக் கொள்ளப்படுமெனவும் தெரிகிறது.

ஒரு வடிமுனைக் கிணற்றின் உதவியால் 5 முதல் 10 ஏக்கர் நிலம்வரை சாகுபடி செய்யலாம் என்று கூறப்படுகிறது.

விவசாய நிலங்களுக்கு வாரிசு வரி விதிப்பு

சென்னை சட்ட சபை செய்த முடிவு

சென்னை, பிப். 21—

மாநில சர்க்காரின் அதிகார வரம்பில் வரும் விவசாய நிலங்களுக்கு வாரிசு வரி விதிக்க இந்திய சர்க்காருக்கும் அதிகாரமளிப்பதை மாநில சட்டசபைகள் அங்கீகரிக்கும் பிரேரபணையை, சென்னை மேல் சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் பிரேரபித்தார்.

இப்பிரேரபணையின் அவசியம் பற்றிக் குறிப்பிடுகையில் அமைச்சர், இந்த வரி விதிப்பை மத்திய சர்க்கார் விதிக்கவிடுவதால் மாநிலத்திற்கு முழு நன்மையும் கிடைக்கும் என்று கூறினார்.

சென்னை சட்ட (மேல்) சபையில்

பிரயோசனமில்லையாம்!

'மகாபலிபுரத்'திற்குப் பதிலாக 'மாமல்லபுரம்' என்று பெயர் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு அமைச்சர் சுப்பிரமணியம், 'ஊர்களின் பெயர்களை மாற்றுவது பிரயோசனமற்றது என்பது என் கருத்து' என்றார்.

விசித்திரப் போக்கல்ல!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பிரயாணிகள் பார்த்துச் செல்லும் இடங்களாக அபிவிருத்தி செய்யப்படவேண்டியவையாக இராமேசுவரம், தஞ்சாவூர், காஞ்சிபுரம், மகாபலிபுரம், மதுரை ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய இடங்கள் பற்றி சர்க்கார் சிபாரிசு செய்யுமென்றும் அப்படி சேர்த்துக் கொள்ளவிருக்கும் இடங்களில் குற்றாலத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்வது பற்றி ஆலோசனை செய்யப்படுமென்றும் நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்.

தமிழ் அகராதிக்கு ரூ. 1 லட்சம்

கடந்த 1912-ல், தமிழ் அகராதியை பிரசுரிக்க பல்கலைக் கழகத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் சர்க்கார் தந்துள்ளதென்றும், அதைத் திருத்துவதைப் பல்கலைக் கழகம் கவனிக்குமென்றும், ஏதாவது குறைபாடுகளிருந்தாலும் அவற்றைக் கவனிக்குமென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அமுல் எப்போது?

முனிசிபல் கமிஷனர்களின் பதவிக்கு சர்வீஸ் விதிகளை இயற்ற முனிசிபல் சட்டத்தைத் திருத்துவது அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறது என்றும், அத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர், அச்சட்டம் அமுல் செய்யப்படும் தேதி நிர்ணயிக்கப்படுமென்றும் அமைச்சர் இராமசாமி படையாச்சி தெரிவித்தார்.

ஓகோ! அப்படியா?

திருவாங்கூர் கொச்சியில் பட்டம் தாணுவின் பி. சோ. கட்சி சர்க்கார் வீழ்ந்து காங்கிரஸ் கட்சி மந்திரி சபை ஏற்பட்டுள்ளபடியால் அங்குள்ள தமிழர்களிடையே நிலவியிருந்த பயம் நீங்கி, நிலைமை அபிவிருத்தியாகும் என தாம் நம்புவதாக அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

திரு—கொச்சி தமிழர் மீது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தையொட்டி ஏற்பட்ட பரபரப்பின் காரணமாக எத்தனை பேர் சென்னை மாநிலத்திற்கு அகதிகளாக வந்திருந்தனர்என்பதுபற்றிய தகவல் சேகரிக்கப்படவில்லை என்றும், அங்கு ஏற்பட்ட நிலை தற்காலிக நிலையானதால், நிலைமை விரைவில் அபிவிருத்தி அடையும் என்று தாம் கருதுவதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

மேற்கு வங்கத்தில் கூடுதலான போலீஸ்!

இராஜஸ்தானுக்கு இரண்டாம் இடம்!

வங்கத்தில் ஒரு சதுர மைலுக்கு ஒரு போலீஸ்காரர்!

இந்தியாவில் உள்ள மாநிலங்கள் அனைத்திலும் மேற்கு வங்கம் தான் அதிக எண்ணிக்கையில் போலீஸ்காரர்களைக் கொண்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக இருந்து வருவது இராஜஸ்தான் ஆகும்.

100 சதுர மைலுக்கு **100** போலீஸ்காரர்கள் மேற்கு வங்கத்தில் உள்ளனர். மக்கள் கூட்டுத் தொகை நிலையில் பார்க்கும்பொழுது **1,000** மக்களுக்கு அதிகப்படியான போலீஸ்காரர்களைக் கொண்டிருப்பது இராஜஸ்தானேயாகும். இவ்விரு நிலையிலும் பம்பாய் இரண்டாவதாக இருக்கிறது.

100 சதுர மைல்களுக்கு 100 என்ற அளவில் மேற்கு வங்கத்திலும், 100-க்கு 57 என்ற அளவில் பம்பாயிலும் போலீஸ்காரர்கள் எண்ணிக்கை இருந்து வருகிறது.

நூறு சதுர மைல்களுக்கு—பெப்சு-52; உத்திரப் பிரதேசம்-45; இராஜஸ்தான்-24; மத்திய பிரதேசம்-22; சவுராஷ்டிரம்-21; விந்தியப் பிரதேசம்-18; ஆஜ்மீரும் இமாசலப் பிரதேசமும் சேர்ந்து-9;—என்று அரசாங்கப் புள்ளிவிவரம் அறிவிக்கிறது.

1,000 மக்களுக்கு—இராஜஸ்தான் - 2.08; பம்பாய்-1.8; சௌராஷ்டிரம் - 1.75; பெப்சு - 1.56; விந்தியப் பிரதேசம் - 1.15; மேற்கு வங்கம்-1.07; மத்தியப் பிரதேசம் 1.06; உத்திரப் பிரதேசம்-0.87;—என்ற அளவில் போலீசார் எண்ணிக்கை இருந்து வருகிறது.

விலைவாசி சரிவை தடுக்க முயற்சி

இந்திய சர்க்கார் மேற்கொள்ளும் திட்டம்

"இலாபமற்ற அளவுக்கு விலைவாசிகள் சரிந்துவிடாமல் தடுப்பதற்காக, சர்க்காரே சிலவகை தானியங்களை குறிப்பிட்ட விலை கொடுத்து வாங்கத் தீர்மானித்துள்ளது."

இவ்வாறு, இந்திய ஜனாதிபதி இராசேந்திர பிரசாத், இந்திய மக்கள் சபையின் இரண்டு சபைகளின் (மேல், கீழ்) கூட்டுக் கூட்டத்தின்போது பேசுகையில் கூறினார்.

"சீனாவுக்கு ஒரே ஒரு சர்க்கார் தான் உண்டு; அதுதான் மக்கள் சீன சர்க்கார் என்று இந்திய சர்க்காரும் அங்கீகரித்துள்ளது. அந்த சீன சர்க்கார் தெரிவித்துக் கொள்ளும் பாத்தியதைகள் யாவும் நியாயமானதே என்றுதான் இந்தியாவும் கருதுகிறது. இந்தப் பிரச்சினை, பேச்சு வார்த்தைகள் மூலமாகவே பைசல் செய்யப்படலாம் என்று கருதுகிறேன்," என்று அவர் சீனா பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

பின்னர் அவர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டிலும் மிகப் பிரம்மாண்டமானதாக இருக்குமென்றும், அதில் இயந்திர உற்பத்தித் தொழிலுக்கும், வேலை வசதிகளை அதிகரிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுமென்றும், அதுமட்டுமல்லாமல் கல்வி முறையைத் திருத்தி அமைப்பதிலும் அதிக முக்கியத்துவம் காட்டப்படுமென்றும் கூறினார்.

இரண்டாவது 'ஐந்தாண்டுத் திட்ட முடிவில், நாடு முழுமையிலும் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் அமுலிலிருக்குமென்றும் குறிப்பிட்டார்.

'சத்து' உணவுக்குத் திட்டம் தயாரிப்பு

இரண்டாவது 5 ஆண்டுத் திட்டம் செய்யப்போவதென்ன?

புதுடில்லி, பிப். 19—

உணவிலுள்ள போஷணை சக்தியை அதிகரிப்பதே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறை அபிவிருத்தியின் நோக்கமாக இருக்கும் என்றும், இதற்கான திட்டங்களையெல்லாம் விவசாய இலாகா தயாரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தியைப் பெருக்குவதுதான் முக்கியமானதாக கருதப்பட்டது. நிலத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தி அதிகபட்ச மகசூல் காண்பதற்கான வழி கோலுவதே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாம்.

15 லட்சம் டன் அரிசியும், கோதுமையும் கொண்ட மத்திய உணவு சேமிப்பு 'ரிசர்வ்' ஏற்படுத்தும் யோசனை சர்க்காருக்கு இல்லையென்றும், சேமிப்புக் கிடங்குகள் கட்ட சர்க்கார் ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

உணவு இறக்குமதித் திட்டத்தை சர்க்கார் இன்னும் இறுதியாகத் தீர்மானிக்கவில்லையாம். மிகக் குறைந்த அளவு உணவு தானியம்தான் இறக்குமதி செய்யப்படுமெனத் தெரிகிறது.

கோதுமை ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா 10 லட்சம் டன் கோதுமையை வாங்கியாக வேண்டும்.

'இலங்கையை விட்டு வெளியேறு!'

ஜப்பானிய பௌத்த குருமாருக்கு இலங்கை சர்க்கார் உத்தரவு

ஜப்பானிலிருந்து இலங்கை வந்திருந்த இரண்டு பௌத்த குருமார்களை இலங்கையை விட்டு வெளியேறுமாறு இலங்கை சர்க்கார் உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஜப்பானிய சமாதானத் தூதுக் குழுவினருடன் வந்த இவ்விரண்டு பேரும், ஜப்பானில் பல பகுதிகளிலும் மிகக் குதூகலமாக வரவேற்கப்பட்டவர்களாம்.

மான்சிங் குழுவுடன் போலீஸ் போர்

குவாலியர், பிப். 21—

மத்யபாரத்திலுள்ள மிகப்பெரும் பேர் பெற்ற கொள்ளையர் தலைவனை மான்சிங் குழுவினருக்கும், போலீசாருக்குமிடையே நடைபெற்ற சண்டையில் பலர் காயமடைந்துள்ளனர் என்று மத்திய பாரத் சர்க்கார் அறிவிப்பு ஒன்று கூறுகிறது மான்சிங்குடன் மற்றும் 6, 7 பேர் பலத்த காயமுற்றனர் என்றும், கொள்ளையர்களனைவரும் காட்டுக்குள் ஓடிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

1954-ம் ஆண்டில் கூடுதலாக 136 ரயில் வண்டிகள் விடப்பட்டன; 117 ரயில் வண்டிகளின் ஓடும் தூரங்கள் நீடிக்கப்பட்டன,

சென்னை சட்டசபையில்...

★

அதுவே அதிகம்!

ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படாமல், ஜமீன் நிலவரிக் குறைப்புச் சட்டத்தின் கீழ் 21 இனும் கிராமக் குளங்கள் பழுது பார்க்கப்பட்டன என்று நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்தார்.

தஞ்சையில் 12-ம், மதுரையில் 9-ம் ஆக 21 பழுது பார்க்கும் வேலைகள் நடைபெற்றன என்றும், பழுது பார்க்கும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேறு எந்தத் திட்டமும் உத்தேசத்தில் இல்லை என்றும் கூறினார்.

விவாதத்தில்தானே இருக்கிறது?

மத்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள சில பெரிய பாசன, மின்சாரத் திட்டங்களை சென்னை சர்க்கார் திட்டக் குழுவிற்குச் சிபாரிசு செய்துள்ளதென்றும், இது பற்றிய விஷயங்கள் இன்னும் கடிதப் போக்கு-வரத்து விவாத நிலையில்தான் இருக்கிறதென்றும் மராமத்து அமைச்சர் தெரிவித்தார்.

தவறே கிடையாது!

சென்ற ஆண்டில் (1953—54) குற்றங்கள் செய்ததற்காக 64 பஸ் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்ற தகவலை போக்கு-வரத்து அமைச்சர் பரமேஸ்வரன் தெரிவித்தார்.

குற்றங்களின் தன்மையைப் பொறுத்து, கடுமையான குற்றங்களுக்கே தண்டனைகள் அளிக்கப்பட்டுள்ளன என்றும், இதில் யூனியன், சங்கம் ஆகிய எவையும் தலையிட முடியாதென்றும், குற்றம் செய்தவர்கள் சமாதானம் கூறவும், இலாகா அதிகாரிகள் சந்தர்ப்பங்கள் அளித்து வருகின்றனர் என்றும் கூறினார்.

திருடுதல், அனுமதியில்லாமல் வேலையினின்றும் நின்று விடுதல் போன்ற குற்றங்களை இனி சர்க்கார் சகிக்காது என்றும் கூறினார். குற்றத்திற்காகத் தண்டனை பெற்றவர்கள் அப்பீல் செய்துகொள்ளலாம் என்றும், ஒன்றிரண்டு தண்டனைகளை சர்க்கார், தம் பரிசீலனையின்போது குறைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தாராள மனப்பான்மை

கீழ் பவானி திட்டத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், புனர்வாழ்வளிக்கவும் சர்க்கார் 7 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவு செய்துள்ளதாக அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார்.

மாலம்புழா திட்டத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் விஷயம் சர்க்கார் பரிசீலனையிலிருந்து வருவதாகவும் தெரிவித்தார்.

ஏனோ? எதற்கோ?

கடந்த ஆண்டு ஆகஸ்டு 11-ந் தேதியன்று சென்னையில் கூடிய நிரந்தர தொழில் கமிட்டியிடம், சென்னை சர்க்கார், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கு பாக்டரிகள் சட்டத்திலிருந்து விலக்களிக்குமாறு சிபாரிசு செய்தனர்; ஆனால், பின்னர் அச்சிபாரிசை சர்க்கார் வற்புறுத்தவில்லை என்று அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

தூத்துக்குடி சதி வழக்கில்

தூத்துக்குடி சதி வழக்கில் (தி. மு. கழகம் நடத்திய அறப்போர் வீரர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு) ஏராளமான சாட்சிகள் விசாரிக்கப்பட இருந்ததாலும், அது பெரிய ஒரு வழக்காக இருந்ததாலும் அவ்வழக்கை விசாரிக்க அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் ஒருவர் நியமிக்கப்பட்டதாகவும், இது விஷயத்தில் ரூ.-5,813 செலவிடப் பட்டதாகவும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

உத்தேசிக்கவில்லையாம்!

சென்னை மாநிலத்தில் மொத்தம் 841 உயர்தரப் பள்ளிகளும், 11,826 மத்திய உயர்நிலைப் பள்ளிகளும், 19,072 ஆரம்பப் பள்ளிகளும் உள்ளனவாம். மேலும் புதிய உயர்நிலைப் பள்ளிகள் எதுவும் திறக்க சர்க்கார் உத்தேசிக்கவில்லையென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

உத்தேசமா?

இவ்வாண்டில், மாவட்டங்களில் மொத்தம் 5 இடங்களில் புதிதாக ஐந்து க்ஷய ரோக சானிடோரியங்கள் ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசித்துள்ளதாகவும், அதற்கு ரூ. 26,53,000 செலவாகுமென்றும், இது விஷயமாகத் தெரிவிக்கப்பட்ட எந்த யோசனையையுமே சர்க்கார் நிராகரித்துவிடவில்லை என்றும், புதுக்கோட்டை, திருநெல்வேலி உட்பட 4 இடங்களை தாம்பரம் சானடோரியம் சூப்பிரண்டெண்டு பார்வையிட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி தெரிவித்துள்ளார்.

இதிலேகூடவா அது?

1953—54-ம் ஆண்டில் மாநிலமெங்கிலும் மொத்தம் 28 தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் அமுலிலிருந்தன என்றும், இவ்வாண்டில் வேறு புதிய திட்டம் எதுவும் ஆரம்பிக்க உத்தேசிக்கவில்லை என்றும், ஒவ்வொரு திட்ட 'பிளாக்'கிலும் 100 கிராமங்கள் அடங்கியுள்ளன என்றும் விவசாய அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்துள்ளார்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு இடத்தில் மட்டும் இவ்வாண்டு ஜூலைத்திங்களில் ஒரு திட்டத்தை ஆரம்பிக்க சர்க்கார் உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சமுதாய நல திட்டங்களில் ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவதையும் சேர்த்துக்கொள்ள சர்க்கார் ஆரம்ப முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகவும், அத் திட்டத்தை விரிவாக்கவும் ஆலோசனை செய்துள்ளதென்றும், அவற்றிற்கான கமிட்டிகள் அமைப்பதில் கட்சி விவகாரங்கள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது என்றும் கூறினார்.

தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டம்

1953—54-ம் ஆண்டில், தொழிலாளர் குடியிருப்பு வசதி திட்டத்தின்கீழ் சென்னை மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ரூ.-2,90,600 அனுமதித்தனர் என்றும், அந்த ரூபாயைக் கொண்டு மொத்தம் 144 வீடுகள் கட்டப்பட்டன என்றும், அதனால் 4-தொழில்கள் பயன் பெற்றன என்றும் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

மேலும், மாநில சர்க்காரும் இதற்கென மானியமாக ரூ.-6,07,018-ம், கடனாக ரூ.-4,80,178-ம் அளித்துள்ளது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு

அழைப்பை ஏற்றுக்கொண்ட நாடுகள் விவரம்

வருகிற ஏப்ரல் மத்தியில் நடைபெறவிருக்கும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்த 25-நாடுகளில் சீனா, தாய்லாந்து, லிபியா, மக்கள் சீனா, ஆப்கானிஸ்தான், எதியோப்பியா, வியட்னாம், இராக், எகிப்து ஆகிய 9 நாடுகள் அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளன என கூறப்படுகிறது.

ஜப்பான் தற்காலிகமாக இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், நாட்டில் பொதுத் தேர்தல் முடிந்த பிறகு உத்தியோக பூர்வமாய் அழைப்பை ஏற்றுக் கொள்வதாக ஜப்பான் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

முதலிடம் தரக் கோரிக்கை

சென்னை சர்க்கார் அங்கீகாரம்

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய திட்டங்களுக்கே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலிடம் தர வேண்டுமென்று சாலைகள் பிரதம எஞ்சினீயர் தெரிவித்த யோசனையை சென்னை சர்க்கார் அங்கீகரித்துள்ளனர் எனத் தெரிகிறது.

ரூ. 12 கோடி செலவில், பெரிய சாலைகளுக்கு (ஹைவேய்ஸ்) ரூ. 6 கோடியும், மற்ற சாலைகளுக்கு ரூ 4 கோடியும், சாலைகள் போடும் கருவிகள், இயந்திரங்களுக்கென 2 கோடி ரூபாயும், செலவு செய்யப்பட வேண்டுமென்ற அடிப்படையில் 1956—57-லிருந்து 1960—61 வரையுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென்ற மற்றொரு யோசனையையும் சர்க்கார் அங்கீகரித்துள்ளது.

திருமணங்கள்

தோழர் போளூர் கே. சுப்பிரமணியம் அவர்களது இரண்டாவது மகளான எஸ். தாராவிற்கும்—சென்னைத் தோழர் கே. வாசுதேவன் அவர்கட்கும் 18—2—55 வெள்ளியன்று, சென்னை தங்கசாலை முருகன் டாக்கீசில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

மணமக்கள் இருவரும் வாழ்க்கை உறுதிமொழி ஏற்றுக்கொண்டதும் மலர் மாலைகள் மாற்றிக்கொண்டனர்.

அடுத்து, தலைவர் உரைக்குப் பின் மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் கா. அப்பாதுரை, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ப. உ. சண்முகம், அ. ச. தங்கவேலர், டி. சண்முகம் எம். எல். ஏ., கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மணமக்களுக்கு ஏராளமான அன்பளிப்புகளும், வாழ்த்துப் பத்திரங்களும் குவிந்தன.

வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் வாசித்தார்.

இறுதியாக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் அரிய தோர் வாழ்த்துரை வழங்கியதும் விழா இனிது முடிந்தது.

இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 4 நன்கொடை அளிக்கப்பட்டது - வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்.

* * *

பெங்களூரில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டில் பெங்களூர் இலட்சுமணபுரி தோழர் வி. குப்பன்—தோழியர் ருக்குமணி திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் நினைவாக 'நம்' நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்—நன்றி-பொறுப்பாளர்.

* * *

அரியலூர் தோழர் ஆறுமுகம்—தோழியர் செல்வநாயகம் வாழ்க்கை ஒப்பந்தம் 11-2-55ல் சிறப்புற நடைபெற்றது. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்-நன்றி-பொறுப்பாளர்.

* * *

11—2—55 காலை 10 மணிக்கு, சென்னை புதுப்பேட்டை, பொது மக்கள் சங்கத்தின் சார்பில், தோழர் தங்கதுரை — தோழியர் இலக்குமி அம்மையார் திருமணம், தோழர் மு. புரட்சிமணி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரனார், எஸ். எஸ். தென்னரசு, கோ. இளவரசு, வி. இளஞ்சேரலாதன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

பிளாட்பாரம் டிக்கெட் 1-அணு!

தாம்பரம்-விழுப்புரம் மார்க்கம் மின்சார இரயில் பாதையாகும்

விடுமுறை நாட்களுக்கு 'ரிட்டர்ன்' டிக்கெட்!

'குழு'வாக பிரயாணம் செய்யும் விவசாயிகள், ஆசிரியர்களுக்கு சலுகைகள்

1955—56-ம் ஆண்டிற்கான இரயில்வே வரவு-செலவு திட்டத்தில் சலுகை தரப்பட்டுள்ள சில முக்கிய அம்சங்கள் இங்கு தரப்படுகிறது:—

1955 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து பிளாட்பாரம் டிக்கெட்டை 2 அணுவிலிருந்து 1 அணுவாகக் குறைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

உலக யுத்தத்திற்குப் பின், இந்திய ரயில்வேக்களில் மீண்டும் தசரா, தீபாவளி பண்டிகைகளுக்கு 'விடுமுறை நாட்கள் ரிட்டர்ன் டிக்கெட்'டுகள் (போகவும், திரும்பி வருவதற்குமான குறைந்த கட்டண டிக்கெட்) கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களுக்காக விடப்படும் 'தனி இரயில்'களில், மாணவர்கள் எண்ணிக்கை 400-க்குக் குறையாமலிருந்தால், சாதாரணமாக விசேட இரயில்களுக்கு வசூலிக்கப்படும் குறைந்தபட்சக் கட்டணங்கள் அவர்களிடம் வசூலிக்கப்பட மாட்டாது.

மாணவர்களுக்கு அளிக்கப்படும் இக்கட்டணச் சலுகை, மாநில சர்க்கார்களின் ஆதரவில் சுற்றுப்பயணம் செய்யும் 'விவசாயக் குழு'விற்கும் அளிக்கப்படும்

400-க்குக் குறையாத மாணவர்களின் பிரயாணக் குழுவினருக்கு அளிக்கப்படும் சலுகை விகித 'சுற்றுப் பிரயாண டிக்கெட்'டுகள், இனி மேல் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்படும்.

தேசீய விஸ்தரிப்புச் சேவைகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று அங்கு ஊதியம் பெறுமல் தொண்டு புரிய விரும்புகிறவர்களுக்கு அங்கு போகவும், விஸ்தரிப்புச் சேவைகள் செய்த பின்னர் திரும்புபவர்களுக்கும் எப்போதும்போலுள்ள சலுகைகள் வழங்கப்படும்.

1,500 மைல்களும், அதற்கு மேலும் பிரயாணம் செய்யும் உல்லாசப் பிரயாணிகள், அல்லது யாத்திரைக்காரர்களுக்கான விசேட இரயில் கட்டணம், சாதாரணக் கட்டணத்தில் முக்கால் பங்காக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ரயில்வே கட்டண விதிகள்

இதுவரையிலும், இந்திய இரயில்வேக்களில், பிரயாணம் செய்யும் தூரம் எவ்வளவு இருந்தபோதிலும் ஒவ்வொரு மைலுக்கும் ஒரே விகிதத்தில் கட்டணம் வசூலிப்பது என்றிருந்த முறை, எப்ரல் திங்கள் முதல் தேதி முதல் மாற்றியமைக்கப்பட்டுவிடும்.

இனிமேல் விரைவு வண்டிகள் (எக்ஸ்பிரஸ்) கட்டணம் 150 மைல்கள் வரைக்கும் 6¼ தம்பிடியாக்கப்படும். முன்னுல் இக்கட்டணம் 6 தம்பிடியாகக் குறைந்திருந்தது. 151—300 மைல்கள்வரை பிரயாணம் செய்தால் இக்கட்டணம் 6 தம்பிடியாகும். 300 மைலுக்கு மேற்பட்டு பிரயாணம் செய்தால் 5 தம்பிடியாகக் குறைக்கப்படும்.

இதுபோலவே, 3-வது சாதாரண வண்டிகளிலும், முறையே 5¼, 5, 4½ தம்பிடி என்று மாற்றி நிர்ணயிக்கப்படும்.

மற்ற வகுப்புகளிலும் இதே முறையில்தான் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தூரப் பிரயாணத்தில் 3-வது வகுப்புக்குக் கட்டணச் சலுகை உண்டு.

உணவு தானியங்கள் போன்ற சில சரக்குகளின் கட்டண விகிதங்களும் சற்றுக் குறைகிறது. அதாவது, மைலுக்கு 2 தம்பிடி அல்லது 301—600 மைல்கள் வரை 7 சதவிகிதமாகவும், 600 மைல்களுக்கு மேல் மைல் ஒன்றுக்கு 1 தம்பிடியும் குறைக்கப்படும்.

3-வது வகுப்பு, மித சீதோஷ்ண வகுப்புப் பிரயாணிகளுக்கு, புதிய இரயில்வே கட்டண விதிகளின்படி விதிக்கப்படும் கட்டணம் கீழே தரப்பட்டுள்ளது:—

49 மைல்களுக்குட்பட்ட 3-வது வகுப்புக் கட்டண உயர்வு, 1 அணுவிற்கு மேல் இருக்காது. 300 மைல்களுக்குக் குறைவான தூரத்திற்கு உயர்ந்தபட்சக் கட்டண உயர்வு 4 அணு

மித சீதோஷ்ணப் பெட்டிகளில் செல்லுவதானுல், 300 மைல்களுக்குக் குறைவான தூரம் பிரயாணம் செய்ய ரூ 6¼ வசூலிக்கப்படும்.

எக்ஸ்பிரஸ் அல்லது மெயில் வண்டிகள் மூலம் பிரயாணம் செய்யும் 3-வது வகுப்புப் பிரயாணிகட்கு விதிக்கப்படும் கட்டணங்கள் முன்னர் இருந்ததைவிட மேற்குறிப்பிட்டுள்ள விகிதப்படி குறைக்கப்படும்.

மித சீதோஷ்ணப் பெட்டிகளில் டில்லியிலிருந்து சென்னை வரும் பிரயாணிகள் இனிமேல் அதிகமாக ரூ 17—4—0 செலுத்த வேண்டியிருக்கும்.

அமுல் நடத்தப்படவிருக்கும் இப்புதிய கட்டண விகிதங்களினுல் 'சீசன்' டிக்கெட் கட்டண விகிதங்களில் மாற்றம் எதுவும் கிடையாது.

பிளாட்பாரம் டிக்கெட் 2 அணுவிலிருந்து 1அணுவாகக் குறைத்துவிட்டதினுலேயே இரயில்வேக்கு ரூ. 15 லட்சம் நஷ்டமேற்படுமென்றும் கூறப்படுகிறது.

ரயில்வே வரவு-செலவுத் திட்டம்

1955—56-ல், இந்திய இரயில்வேக்களின் நிகர உபரித் தொகை ரூ. 7·14 கோடியாக இருக்கும்; நடப்பு ஆண்டிற்குத் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி, நிகர உபரித் தொகை ரூ. 6·57 கோடியாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள்ளாகவே இரயில்வேக்களின் செலவுகள் ரூ. 4·18 கோடி ஆகிவிடலாம் என்று தெரிகிறது.

1955—56-ம் ஆண்டில் மொத்த வருமானம் ரூ. 292·50 கோடியாக இருக்கும்; நடப்பு ஆண்டிற்குத் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூ. 282·80 கோடியாகும். பிரயாணிகளின் போக்கு-வரத்தின் மூலம் ரூ. 104·50 கோடி கிடைக்கும்; இது, திருத்தப்பட்ட மதிப்பீட்டையும்விட ரூ. 2·7 கோடி அதிகமாகும்.

1955—56-ல், 'கூட்ஸ்' போக்குவரத்து மூலம் மதிப்பிடப்பட்டிருக்கும் வருமானம் ரூ. 163·90 கோடியாகும்; இது திருத்தப்பட்ட மதிப்பீட்டையும்விட ரூ 7·90 கோடி அதிகமாகும்.

அதே நேரத்தில், இந்த அதிகப்படியான வருமானத்திற்கு எதிராக, 'கோச்சு'கள் வருமானத்தில் ஒரு கோடி ரூ. குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1955—56-ம் ஆண்டில் சாதாரண வேலைச் செலவுகள் ரூ. 206·59 கோடி; இத்தொகையும் திருத்தப்பட்ட மதிப்பீட்டைவிட ரூ. 3·83 கோடி அதிகமாகும்.

திருத்தப்பட்ட திட்டப்படி, தேய்மான ரிசர்வ் நிதிக்கு ரூ. 35 கோடியும், பொது ரெவினியூவிற்கென ரூ. 36·07 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் போக்கு-வரத்தில் இரயில் வசதியையும், கரையோரக் கப்பல் வசதியையும் இணைப்பது சம்பந்தமாக யோசனைகள் கூறுவதற்கென ஒரு ஆலோசனைக் குழுவும் நியமிக்கப்படும்.

இரயில் விபத்துக்களைத் தடுக்க தண்டவாள இணைப்பு முறை எல்லா பகுதிகளிலும் பின்பற்றப்படும்; இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 1 கோடி செலவழிக்கப்படும்.

ரயில்வே சிப்பந்திகளுக்குக் குடியிருப்பு வீடுகள்

1952 — 55-ம் ஆண்டுகளில் இரயில்வே ஊழியர்களுக்கென 24,000-க்கு மேற்பட்ட வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டிலும் (1955—56) மேலும் புதிதாக 10,000 வீடுகளைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளது. இதற்கென இவ்வாண்டில் மொத்தம் 5·33 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

★

தென்பகுதியில்...

தாம்பரம்—விழுப்புரம் மின்சார இரயில் பாதை

தென் பகுதி இரயில்வேக்களில், தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையிலும் மின்சார இரயில் பாதை போடுவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விவரமான குறிப்புகளும் (பிளான்) செலவுத் திட்டங்களும் தயாரிக்கப்பட்ட பின்னர், இதற்கான வேலைகள் உடனே ஆரம்பிக்கப்படும்.

சென்னை, பெரம்பூர் இரயில் பெட்டி தொழிற்சாலையில் இந்த ஆண்டில் (1955—56) 20 கோச்சு வண்டிகள் உற்பத்தியாகும்.

ரூ. 70 லட்சம் செலவில் மதுரை—போடி நாயக்கனூர் மார்க்கமும், வேஷாரனூர் — நீலாம்பூர் மார்க்கமும் போடப்படும்.

தற்போது மீட்டர் கேஜ் (மத்திய அளவு) பாதையாக இருந்து வரும் கூடூர்—ரேணிகுண்டா மார்க்கம், பிராட்கேஜ் (பெரிய அளவு) பாதையாக மாற்றப்படுவதற்கு, 1955—56-ல் ரூ 70 லட்சம் ஒதுக்கப்படும்; இப்பாதையின் மொத்த நீளம் 52 மைல்களாகும். இப்பாதையை மாற்றும் திட்டத்திற்கு மொத்தம் 2 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1955—56-ம் ஆண்டின் பின் பகுதிகளில், கீழ்க்கண்ட இடங்களுக்கிடையே இரயில் பாதைகள் அமைக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி சர்வே செய்யப்படும்:—

பெங்களூர் — சேலம்: போக்குவரத்து, எஞ்சினீயரிங் சர்வே.

திருவனந்தபுரம் — கன்னியாகுமரி அல்லது திருநெல்வேலி — கன்னியாகுமரி: போக்குவரத்து சர்வே.

காட்பாடி — காஞ்சீபுரம் அல்லது வேலூர் — காஞ்சீபுரம்: போக்குவரத்து, எஞ்சினீயரிங் சர்வே,

சீர்திருத்த திருமணம்

25—2—55 காலை 9½ மணிக்கு, அம்மாபேட்டையில், தோழர் ஆ. சண்முகம்—தோழியர் மு. ஆனந்தாய் சீர்திருத்த திருமணம், தோழர். சேலம் ஏ. சித்தையன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. பெருமாள், ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

பெப்சு காங்கிரசில் பதவி..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கட்சித் தலைவராக்கிவிட்டது; அவரும் முதல் மந்திரி பதவியில் அமர்ந்து ஒரு திங்களுக்கு அதிகமாகிறது.

தலைவர் தேர்தலில் காங்கிரஸ் மேலிடத்தின் போக்கைக் கண்டிக்கும் வகையிலும், முதன் மந்திரியாகும் ஆசையிலும், நிலவரி மந்திரியாக இருக்கிற சர்தார் அரிசரன் சிங், முதன் மந்திரி பிஷ். பானுக்கு எதிராகக் கோஷ்டி சேர்ப்பதில் முனைந்திருக்கிறார்.

தலைவர் தேர்தல் நடத்தப்பட்டால் பிஷ். பான் தோற்றுவிடுவார் என சர்தார் கோஷ்டி திட்டவட்டமாகக் கூறுகிறது.

இரண்டு கும்பல்களிடையே ஏற்பட்டுள்ள பிணக்கைப் போக்கி, ஒற்றுமையை உண்டாக்க காங்கிரஸ் மேலிடம் முன் வந்தது. அதற்காக பரோஜா என்ற ஒருவரை பாடியாலா அனுப்பிவைத்து ஒற்றுமைக்கு வழிகாண வகை செய்தது.

அவர் முயற்சி வீணுயிற்று. கடந்த நான்கு நாட்களாக அவர், இரு கோஷ்டியினரையும், தனித் தனியாகவும், கூட்டாகவும் கலந்தாலோசித்தும், ஒற்றுமையை உருவாக்கும் எண்ணம் தோற்றே விட்டது.

சட்ட சபை வரவு-செலவு திட்டக் கூட்டம் முடிகிற வரையில் தலைவர் தேர்தலைத் தள்ளிவைக்க வேண்டும் எனக் கூறிவிட்டு, தனது தூதுக் கேற்பட்ட தோல்வியை, காங்கிரஸ் மேலிடத்திடம் அறிவிக்க, டெல்லி திரும்பிவிட்டார்.

திராவிட நாடு முடிவை.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"ஆவடி மாநாட்டிற்கு முன்பு வரை—கடந்த 5 அல்லது ஆறு ஆண்டு காலமாய் — 'காங்கிரஸ் ஆட்சியிலிருப்பதே, இங்கு ஒரு க்ஷேம நல ராஜ்யம் அமைப்பதற்காகத்தான்,' என்று கூறி வந்திருக்கிருர்கள்; மக்களுக்கு நலம் புரிவதற்காகத்தான்-நலமான ஒரு ஆட்சி அமைப்பதற்காகத்தான் காங்கிரஸ் ஆட்சியிலிருப்பதாகக் கூறி வந்திருக்கிருர்கள்; ஆனுல், ஆவடியில் திடீரென பேச்சை மாற்றுவானேன்?

"இப்போது அவர்கள் 'சோஷலிச மாதிரி,' என்ற பொருளாதார அமைப்பை நிறுவப்போவதாகக் கூறியிருக்கிருர்கள்.

"அவர்கள் கூற்று எவ்வளவு பித்தலாட்டமானது என்பதை எனக்கு முன்னுலே பேசியவர்கள் எடுத்துக்காட்டினுர்கள்.

"காங்கிரசார் கூறுவது உண்மையான சோஷலிச அமைப்பே என்று விவாதத்திற்காக வைத்துக் கொள்வோம்; எப்போதிலிருந்து இவர்கள் சோஷலிசம் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிருர்கள்?

"கடந்த 5 அல்லது 6 ஆண்டு காலமாக இந்த நாட்டிலே நாம் சமதர்ம இலட்சியம் குறித்துப் பேசி வருகிறோம்; இன்னும் பலர் பேசி வருகிருர்கள்; இதன் விளைவாக நாட்டிலே, மக்களிடையே சமதர்ம லட்சியத்திற்கு நல்ல ஆதரவு பெருகிவந்துள்ளது; மக்களின் நிர்ப்பந்தத்திற்காளாக்கப்பட்டதினுல்தானே, காங்கிரஸ், 'சோஷலிசம் மாதிரி' என்றுவது பேச முன்வருகிறது?

"எப்படி, பிடிபட்ட கள்ளன் மரத்திலே கட்டப்பட்டு, உதை பெற்ற பிறகு வலிதாங்காமல், 'திருடிய பொருளை அங்குமறைத்து வைத்திருக்கிறேன்,' என்று கூறுகிறுனே, அதேபோலத்தான், காங்கிரசும், கடந்த 5 ஆண்டுகாலமாக அரசியல் சூழ்நிலையால் நிர்ப்பந்திக்கப்பட்டது — 'சோஷலிச இலட்சியம் தேவை,' எனக் கூற."

மாற்றப் போவதில்லை?

டால்மியாபுரம் இரயில் நிலையத்தின் பெயரை மாற்றப் போவதில்லை என்று இரயில்வே குழு முடிவு செய்துள்ளதாம்.

இது விஷயத்தில் இரயில்வே குழுவினர் சென்னை சர்க்காரைக் கலந்து கொண்டுள்ளதாகவும், இரயில் நிலையங்களின் பெயர்களைக் 'கிளர்ச்சி'க்காக மாற்றிக் கொண்டிருப்பதானுல் அது, மேலும் கிளர்ச்சிகளுக்குத்தான் இடமளிக்கும் என்று இரயில்வே குழுவினர் கருதுவதாகவும் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

சிமெண்ட் உற்பத்தி, 1953-ம் ஆண்டில், 37,80,324 டன்னுக இருந்தன. 1954-ம் ஆண்டில், 48,57,045 டன்னுக உயர்ந்தது.

விவசாயக் கடன் வாய்தா மசோதா

விவசாயக் கடன் வாய்தா மசோதாவை, ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற பிரரேபணையை சென்னை சட்ட (கீழ்) சபை நிறைவேற்றியது.

கடன்களை ரத்து செய்வதோ, அல்லது குறைப்பதோ இம்மசோதாவுடன் சம்மந்தப்பட்ட விஷயமாகாது என்றும், இது, தவணைகளில் கடனைத் திருப்பித் தருவதற்கு வசதி செய்யும் மசோதாதான் ஆகும் என்றும் அமைச்சர் மாணிக்கவேலர் மசோதாவின் முதல் கட்ட விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

தவணைகளை அதிகரிக்க வேண்டுமென்றும், கடனைக் குறைப்பதில் சர்க்காரே வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் உறுப்பினர்கள் பலர் ஆலோசனைகள் தெரிவித்தனர்.

விவாதத்தின் இறுதியில் பதிலளித்துப் பேசிய அமைச்சர், கடன் ஒத்திவைப்புச் சட்டம் தற்காலிகமானதுதான் என்றுலும், கஷ்ட நிலைமை காரணமாக மேலும் விவசாயிகளுக்குக் கடன் தவணை வசதி அளிக்கப்படுகிறது என்றும், அதிக தவணைகள் தரப்படுவது அனுமதிக்கப்பட்டால் சகஜமான கிராமக் கடன் வசதி பாதிக்கப்பட்டு விடும் என்றும் கூறினுர்.

கொள்ளைக் குழு தலைவர்கள் கைது!

சென்னை, பிப். 22—

சென்னை நகரிலும், தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான மாவட்டங்களிலும், மற்றும் பல மாநிலங்களிலும் கடந்த மூன்ருண்டுகளாகப் பெரும் பெரும் கொள்ளைகளை நடத்திய குறவர் கோஷ்டித் தலைவர்களை சென்னை துப்பறியும் போலீசார் கைது செய்து சுமார் 1 லட்சம் பெறுமான தங்கம், வைர நகைகளைக் கைப்பற்றினர் என்று தெரியவருகிறது.

தாய்லாந்தில் சீனப் படைகள்?

பாங்காக், பிப். 21—

தாய்லாந்துக்கருகில் தென் சீனுவில் 20,000 கம்யூனிஸ்டுத் துருப்புகள் குவித்து வைக்கப்பட்டுள்ளதாக தாய்லாந்துப் பிரதமர் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணுதுரை, எம்.ஏ,